**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.STC.103/2023
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : பால்ராஜ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of August 2023.

30.08.2023

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரியை தெரியும். 07.04.2022 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் எனது வீட்டின் அருகில் சிறுநீர் கழித்துவிட்டு நான் சென்றுபடுத்துவிட்டேன். பின்பு 08.04.2022 ம் தேதி காலை 07.00 மணிக்கு எனது வயல் காட்டிற்கு சென்று மிளகாய் செடியை பார்த்து விட்டு காலை 07.45 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டேன். அப்போது திரேஷ் என்னை வீட்டை விட்டு வெளியே வாடா தேவிடியா பயலே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி திட்டினார்.

2) நான் வெளியே வீட்டை விட்டு வந்தபோது கையில் வைத்திருந்த விளக்கமாற்றால் என்னை அடித்துவிட்டார். அப்போது இவ்வழக்கின் எதிரி கம்பை எடுத்து எனது நெஞ்சில் அடித்தார். அதில் எனது நெஞ்சு வீங்கியது. நான் வீங்கிய நெஞ்சுடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும்

புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு நான் கொடுத்தது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.